# FORM-3
# MINUTES OF THE COUNCIL MEETINGS
## குழித்துறை நகராட்சி

**குழித்துறை நகர் மன்றத்தின் 31–05–2019 வெள்ளிக்கிழமை நடைபெற்ற சாதாரணக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்**

பொருள் எண். 1

தமிழ்நாடு நகர்ப்புற சாலை மேம்பாட்டுத் திட்டம் 2018–2019 (TURIP)ன்கீழ் குழித்துறை நகராட்சிப் பகுதியில் சாலை மேம்பாடு செய்யும் பணி ரூ.100.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கான 22–02–2019–ம் நாளய ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை தினசரி நாளிதழில் விளம்பரம் செய்த வகைக்கு விளம்பரக் கட்டணம் ரூ.86,625/– Ravi Publicity Service நிறுவனத்திற்கு வழஙகப்பட வேண்டியுள்ளது. (பட்டியல் எண். 18–19/1417) மேற்படி விளம்பரக் கட்டணம் வருவாய் நிதியிலிருந்து வழஙகிட மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண். 3276**
**அனுமதிக்கப்படுகிறது**

பொருள் எண். 2

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளிலும் தானியஙகி குடிநீர் மையம் நிறுவும் பணிக்கு 28–02–2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் M/S. Environ India, Nagercoil நிறுவனத்தால் கொடுக்கப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளியின் தொழில் நுட்பம் தகுதி வாய்ந்ததாக உள்ளதால் 02–03–2019 அன்று Price Bid திறக்கப்பட்டது. மேற்படி ஒப்பந்தப்புள்ளி விபரம் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

| Sl. No. | Description | Rate to be remitted to the Municipality (Rupees per 20 lr.) | Rate to be charged for sale to Public (Rupees per 20 lr.) | Rate be charged for sale to Public (Rupees per 1 lr. for chilling madine) |
|---|---|---|---|---|
| 1 | Establishment of 1000 lr./ Hr.Capacity community drinking water system through Reserve asmosis with UV Treatment in 21 locations of Kuzhithurai Municipality under PPP mode | Rs.1.00 | Rs.7.00 | Rs.2.00 |

மேற்படி திட்டம் தமிழக அரசின் மானியக்கோரிக்கையில் இடம் பெற்றுள்ளதாலும், 5 முறை டெண்டர் கோரியும் எவரும் டெண்டர் கோர முன்வராததாலும் 6வது முறையாக டெண்டர் கோரியதில் வரப்பெற்ற மேற்படி M/S. Environ India, Nagercoil நிறுவனத்தின்

ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம். அவசர அவசியம் கருதி பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண். 3277**
**அங்கீகரிக்கப்படுகிறது**

பொருள் எண். 3

தமிழ்நாடு நகர்ப்புற சாலை மேம்பாட்டு திட்டம் 2018–2019 (TURIP 2018-2019)ன்கீழ் கீழ்காணும் சாலைகளை மேம்பாடு செய்யும் பணி மேற்கொள்ள 22–02–2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூபாய் இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் ஒப்பந்த விகிதம் |
|---|---|---|---|
| 1 | குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.10, 11, 12 தேவிகுமாரி கல்லூரி அருகில் உள்ள தெற்றிவிளை சாலை, சப்பாத்து சாலை, (சாஸ்தாகோவில் முதல் குருசடி வரை) கண்ணக்கோடு கிருஷ்ணன்கோவில் சாலை மற்றும் கூத்தமன்விளை ஆகிய சாலைகளில் மேம்பாடு பணி செய்தல் | 100.00 | 1) திரு.எஸ். ஜீன்ஸ் மதிப்பீட்டை விட 0.25% குறைவு<br><br>2) திரு.A. ஸ்டாலின் மதிப்பீட்டை விட 0.80% அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1 திரு.எஸ். ஜீன்ஸ் என்பவரால் கொடுக்கப்பட்டுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண். 3278**
**அங்கீகரிக்கப்படுகிறது**

பொருள் எண். 4

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட தெரு மின்கம்பங்களிலுள்ள தெருவிளக்குகளை பராமரிப்பு செய்வதற்கு ரூ.9,20,000/– மதிப்பீட்டில் மின்சாதன உதிரிப்பொருட்கள் கொள்முதல் செய்யும் பணிக்கு 11–01–2019 அன்று E.Tender கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

| வரிசை எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டு விகிதம் |
|---|---|---|
| 1 | M/S. JES, Electricals,<br>Trinity Complex, Tiruthuvapuram | மதிப்பீட்டை விட 15.20% குறைவு |
| 2 | M/S. T.R. Traders,<br>11/56B, Bazar Street, Thazhakudi | 13.71% குறைவு |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் இனவாரியான ஒப்பு நோக்கு பட்டியலின்படி மதிப்பீட்டில் தெரிவிக்கப்பட்டுள்ள வரிசை எண்.1, 2, 3, 28, 29, 30, 32, 33–ற்கு மேற்படி இருநிறுவனங்களும் மதிப்பீட்டை விட கூடுதலான விலை நிரக்கு குறிப்பிட்டு ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளமையால் மேற்கண்ட இருநிறுவனங்களிடமும் Negotiation கோரப்பட்டதில் வரிசை எண்.(1) JES Electrical நிறுவனத்தால் Negotiation கொடுக்கப்பட்டது. T.R.Traders நிறுவனத்தால் Negotiation கொடுக்கப்படவில்லை. JES நிறுவனத்தால் கொடுக்கப்பட்ட Negotiation படி ஒப்பு நோக்கு பட்டியலிடப்பட்டதில் மதிப்பீட்டை விட 22.08% குறைவாக உள்ளது. எனவே மதிப்பீட்டை விட 22.08% குறைவான விலை விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள JES, Electrical நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

அவசர அவசியம் கருதி குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள JES, Electrical நிறுவனத்திற்கு வினியோக உத்திரவு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண். 3279**
**அங்கீகரிக்கப்படுகிறது**

<u>பொருள் எண். 5</u>

2019–2020–ம் ஆண்டிற்கான வரவு செலவு அறிக்கை வருவாய் மற்றும் மூலதன நிதி குடிநீர் மற்றும் வடிகால் நிதி மன்றத்தின் பார்வைக்கு.
ந.க.எண்.550/2019/பி1.

**நகர்மன்றத் தீர்மான எண். 3280**
**பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

<u>பொருள் எண். 6</u>

குழித்துறை நகரம் புல எண். A2/21–ல் உள்ள 2.25 சதுர மீட்டர் (1.50 x 1.50) இடத்தினை Syntex tank அமைத்து பொதுமக்களுக்கு குடிநீர் வசதி செய்து வழங்க வேண்டி, திருமதி. பவானி என்பவரால் நகராட்சி ஆணையர் பெயரில், தான ஆவண எண்.62/2019–ன்படி பதிவு செய்து தரப்பட்டுள்ளது. எனவே மேற்படி 2.25 சதுர மீட்டர் இடத்தில் பொதுமக்களுக்கு வேண்டி Syntex tank அமைக்க இடத்தை ஏற்றுக் கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு. :– மன்றம் அனுமதிக்கலாம்.
F.No.294/2005/TPI.

**நகர்மன்றத் தீர்மான எண். 3281**
**அனுமதிக்கப்படுகிறது**

<u>பொருள் எண். 7</u>

14–வது நிதிக்குழு மானியத்தின் கீழ் குழித்துறை நகராட்சிப் பகுதிகளில் திட்டப்பணிகள் மேற்கொள்ள 15–12–2017 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்படி ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்ட வகைக்கு விளம்பரக் கட்டணம் ரூ.18950/– வழங்க கோரி மக்கள் குரல் பத்திரிக்கை பட்டியல் வரப்பெற்றுள்ளது. பட்டியல் எண்.MAB070800672,

நாள் 27–11–2017 விளம்பரக் கட்டணம் ரூ.18950/– மக்கள் குரல் பத்திரிகைக்கு வழஙகிட மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண். 3282**
**அனுமதிக்கப்படுகிறது**

<u>பொருள் எண். 8</u>

தமிழ்நாடு ஒருஙகிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகள் 2019–ன்படி நகராட்சி பகுதிக்குள் கட்டிடஙகள் கட்ட கட்டிட உரிமையாணை கட்டணஙகள் நிர்ணயம் செய்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. மேற்படி தீர்மான விபரத்தை பொதுமக்கள் அறியும் வண்ணம் மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்ய விளம்பர கட்டணம் ரூ.12,600/– செலவு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
F.No.2052/2010/TPI.

**நகர்மன்றத் தீர்மான எண். 3283**
**அனுமதிக்கப்படுகிறது**

<u>பொருள் எண். 9</u>

இந்நகராட்சியில் 2017–2018–ம் ஆண்டிற்கான தணிக்கை அறிக்கையினை அச்சிட்டு பைண்டிங செய்த வகையில் ரூ.10,450/–ஐ Aruma Tec Arumanai உரிமையாளர் திரு.சி. நாகப்பன் என்பவருக்கு வழஙகிட மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**நகர்மன்றத் தீர்மான எண். 3284**
**அனுமதிக்கப்படுகிறது**

<u>பொருள் எண். 10</u>

வறுமை கோட்டிற்கு கீழ் வாழும் நகர்புற ஏழைகளுக்கு குறிப்பாக விவசாய தொழிலாளர்கள் மற்றும் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ள ஏழைத்தொழிலாளர்கள் குடும்பஙகளுக்க ஒருமுறை சிறப்பு நிதியுதவி ரூ.2000/– வழஙகும் திட்டத்திற்காக விண்ணப்ப படிவம் உள்ளூர் அச்சகத்திலிருந்து விலைப்புள்ளி பெற்று அச்சிட்டு பெறப்பட்ட வகையில் கிறிஸ்டல் அச்சகத்திற்கு ரூ.30,000/– வழஙகிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

அ.கு.:– பணியின் அவசரம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி பட்டியல் தொகை வழஙகியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண். 3285**
**அஙகீகரிக்கப்படுகிறது**

<u>பொருள் எண். 11</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான உரக்கிடங்கில் அடிக்கடி தீவிபத்து ஏற்படுகிறது. தீவிபத்து காலஙகளில் தீயினை தீயணைப்பு துறையின் மூலம் அணைக்கப்பட்டு வருகிறது. நகராட்சி உரக்கிடஙகில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளை கிணற்றில் தற்போது தண்ணீர் இல்லாமல் தூர்ந்த நிலையில் உள்ளது. மேலும் தீதடுப்பு சாதனஙகள் மற்றும் தீவிபத்து ஏற்பட்டால் உடனடியாக தீயினை அணைக்கும் விதத்தில் உரக்கிடஙகில் எவ்வித முன்னேற்பாடுகளும் இல்லை. இதனால் தீவிபத்து ஏற்படும் காலஙகளில் தீயினை அணைப்பதற்கு மிகவும் சிரமம் ஏற்பட்டு வருகிறது. எனவே மாவட்ட தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் கன்னியாகுமரி மாவட்டம் அவர்களின் ந.க.எண்.2518/ஆ/2019, நாள் 14–05–2019–ல் அறிவுறுத்தியுள்ளபடி மேற்படி உரக்கிடஙகில் புதிதாக ஆழ்துளை கிணறு அமைக்கவும், 2000 லிட்டர் HDPE Tank அமைத்து தண்ணீர் சேமிக்கவும், Compost yard மற்றும் Filter house-ல் Hydrant point அமைக்கவும் Filter house-ல் பொருத்தவும் ரூ.4,00,000/–ற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணிகளை மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை வருவாய் நிதியில் செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண். 3286**
**அனுமதிக்கப்படுகிறது**

<u>பொருள் எண். 12</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான பொதுசுகாதாரப் பிரிவு வாகனம் TN75.J 8227–க்கு 2019–2020–ம் ஆண்டிற்கான தகுதிச் சான்று பெறுவதற்கு வாகனத்திலுள்ள பழுதுகள் நீக்கம் செய்வதற்கு GST உட்பட ரூ.68,900/– மதிப்பீடு M/S. Ganesh Motor Works நிறுவனம் மூலம் பெறப்பட்டுள்ளது. மேற்படி வாகனத்தின் பழுதுகள் நீக்கம் செய்யவும் அதற்கான செலவினத்தை வருவாய் நிதியில் செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண். 3287**
**அனுமதிக்கப்படுகிறது**

<u>பொருள் எண். 13</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளிலுள்ள குடிநீர் வினியோக குழாய்கள் மற்றும் பிரதான குழாய்கள் Sluice வால்வுகள், Air வால்வுகளில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்து சீரான முறையில் குடிநீர் வினியோகம் செய்வதற்கு ஒரு வருடத்திற்கு ஆகும் செலவினம் உத்தேச மதிப்பீடு ரூ.7,00,000/– தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை செய்யவும் அதற்கான செலவினத்தை குடிநீர் நிதியில் செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண். 3288**
**அனுமதிக்கப்படுகிறது**

<u>பொருள் எண். 14</u>

தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019, அரசாணை நிலை எண்.18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழுங்குத் துறை ( MA1 ) நாள் 4–2–2019–ல் உத்திரவு பிறப்பிக்கப்பட்டு அதனை தமிழ்நாடு அரசிதழில், அரசிதழ் எண்.43, நாள் 4–2–2019–ல் வெளியிடப்பட்டுள்ளது. மேற்கண்ட அரசாணை மற்றும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019–னை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அ.கு,.:– மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண். 3289**
**பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது**

<u>பொருள் எண். 15</u>

தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019–ல் விதி எண்.30(1)–ன்படி தொடர் கட்டுமான பகுதிகளை கண்டறிந்து மன்ற அனுமதி பெற்று நகர் ஊரமைப்பு இயக்குநர் அல்லது அரசுக்கு அனுப்பி ஒப்புதல் பெற தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி குழித்துறை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள தொடர் கட்டுமான பகுதிகள் நகரளவு எண்கள் வாரியாக கீழ்கண்டவாறு பட்டியலிடப்பட்டுள்ளது. மேற்படி பட்டியலை நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பி ஒப்புதல் பெற மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>Continuous Building Area</u>**

**<u>Ward A</u>**

Block 1 : 11 to 20, 26pt, 27, 28pt, 30pt, 31pt, 38 to 45, 104 to 107, 110, 111 to 135, 142 to 158

Block 2 : 77 to 80, 83, 84, 124, 125 to 130, 132, 133, 134, 154, 155, 156, 157

Block 3 : 27 to 33, 36, 37, 46, 48, 84 to 92, 94 to 98

Block 4 : 1 to 10, 12, 15, 16

Block 5 : 4 to 7, 10 to 17, 36 to 43, 45 to 54, 55, 60. 62, 63, 64 to 67

Block 6 : 160 to166, 170, 174, 175 to 181, 183 to 185, 213, 214, 218, 222, 223, 225

**<u>Ward B</u>**

Block 3 : 124, 129 to 140, 142, 144, 147, 148, 149, 152, 153, 159, 172, 173, 180 to 182, 216 to 223, 248pt, 250pt, 270-280

Block 5 : 9, 10, 11, 13 to 17, 19 to 26, 28, 29, 30, 79, 80, 81,84 to 87,89, 90 to 93

Block 6 : 3, 4, 6 to 19, 25pt, 26, 27,28, 45 to 54

Block 7 : 11 to 58

Block 8 : 2, 3, 4, 6 to 11, 34, 36 to 43, 82 to 87

Block 11 : 8 to 17, 20 to 31, 33 to 52, 54 to 67, 69, 70, 96 to 101

**Ward C**

Block 3 : 41, 42 to 46, 48, 49

Block 4 : 1 to 7, 17 to 27, 30 to 39, 41 to 57

Block 5 : 1 to 83, 91 to 93, 97 to 106, 109 to 118

Block 6 : 26 to 46, 48 to 80, 117 to 133, 136, 149 to 154

Block 7 : 49 to 60, 62 to 73

Block 8 : 1 to 42, 45 to 50, 76 to 83,

Block 9 : 1 to 14, 16 to 20, 51 to 99, 102 to 113

**Ward D**

Block 1 : 5 to 9, 19, 20, 23, 24, 35 to 38, 40, 41, 42, 44, 45, 51, 53 to 60, 71 to 94

Block 2 : 1 to 22, 24 to 30, 32 to 76, 78 to 82, 84, 85, 88, 89, 90, 110

Block 3 : 6pt, 20 to 65, 70 to 86

Block 4 : 4 to 7, 9 to 12, 19 to 29, 31, 32, 33pt, 34,35,37 to 39,144pt, 153

Block 5 : 2 to 7, 18 to 22, 26, 213 to 221, 226 to 232, 236 to 253

Block 6 : 1 to 9, 12 to 19, 35, 36, 37, 38, 41pt, 40, 46pt

Block 7 : 6, 7, 8, 12, 13, 14, 27, 29, 37, 38, 39, 40, 50, 51, 52, 57pt, 60, 61pt, 71, 72, 73, 74, 83,

Block 8 : 31, 32, 35, 36, 38 to 46, 50 to 54

Block 9 : 1 to 25, 27 to 31, 35, 43 to 52, 54, 58 to 70, 75, 76, 77, 78, 79, 80, 81

Block 10 : 1 to 69

Block 11 : 1 to 100

Block 12 : 4 to 69, 108 to 118, 122 to 128

Block 13 : 4 to 7, 10 to 34, 37, 53 to 60, 64 -79, 80, 81

அ.கு.:– மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண். 3290**
**அனுமதிக்கப்படுகிறது**

பொருள் எண். 16

குழித்துறை நகராட்சியால் நடத்தப்படும் 94–வது வாவுபலி பொருட்காட்சியில் முதல் முறையாக அனைத்து இனஙகளும் சேர்த்து ஒரே இனமாக ஏலம் விடப்பட்டதில் செய்தி மக்கள் துறை மூலம் விளம்பரம் செய்த வகைக்கு Express Publication (Madurai) private Limitted–க்கு ரூ.26,363/– வரப்பெற்றுள்ளது தொகை வழஙக மன்றத்தின் அனுமதிக்கு.

**நகர்மன்றத் தீர்மான எண். 3291**
**அனுமதிக்கப்படுகிறது**

பொருள் எண். 17

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான பி.பி.முனுசாமி வணிகவளாக கடைகள், குழித்துறை வணிகவளாக கடைகள், IDSMT கடைகள். மார்த்தாண்டம் பேருந்து நிலைய கடைகள், கருஙகல் சாலை கடைகள் 9 வருடம் முடிந்த கடைகள் பொது ஏலம் விடப்பட்டது. இதில் கடைகளின் உரிமம் கிடைக்காத உரிமதாரர்கள் தாஙகள் ஏற்கனவே செலுத்தியுள்ள வைப்பு தொகையினை திரும்ப வழஙகிட கேட்டுள்ளார்கள். மேற்படி வைப்பு தொகைகள் யாவும் காலஙகடந்த வைப்பு தொகை பதிவேட்டில் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே காலஙகடந்த வைப்புத் தொகையினை திரும்ப வழஙகிட மன்றம் அனுமதிக்கலாம்.

| வரிசை எண் | வைப்புத் தொகை திரும்ப கோரியவர் பெயர் | வைத்தொகை செலுத்திய வருடம் | கடை எண் | காலம் கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் இருப்பில் உள்ள தொகை ரூபாய் | காலஙகடந்த பதிவேடு பக்க எண் |
|---|---|---|---|---|---|
| 1 | G. டொனால்டு | 2007–2008 | Kuzhithurai Shop No.1 | 2,00,000 | Vol.III-ல் 38 |
| 2 | G. டொனால்டு | 2007–2008 | Kuzhithurai Shop No.1 | 21,000 | Vol.III-ல் 38 |
| 3 | G. பிரகாஷ்குமார் | 2008–2009 | PPM -G4 | 1,00,000 | Vol.III-ல் 39 |
| 4 | G. பிரகாஷ்குமார் | 2008–2009 | PPM –G5 | 1,00,000 | Vol.III-ல் 39 |
| 5 | G. பிரகாஷ்குமார் | 2008–2009 | PPM –G8 | 1,00,000 | Vol.III-ல் 39 |
| 6 | G. பிரகாஷ்குமார் | 2008–2009 | PPM –G9 | 1,00,000 | Vol.III-ல் 39 |
| 7 | T. றாபி | 2006–2007 | IDSMT Shop- 24 | 50,000 | Vol.III-ல் 19 |
| 8 | T. றாபி | 2006–2007 | IDSMT Shop- 25 | 50,000 | Vol.III-ல் 19 |
| 9 | சுகேஷ் | 2007–2008 | Kuzhithurai Shop No.4 | 1,50,000<br>9,060 | Vol.III-ல் 38 |

**நகர்மன்றத் தீர்மான எண். 3292**

**அனுமதிக்கப்படுகிறது**

<u>பொருள் எண். 18</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான கடைகள் குத்தகைக்கு எடுத்து வைப்புத் தொகை மற்றும் ஒருவருட வாடகை தொகை, 2018–2019 வாடகை தொகை செலுத்த காரணத்தினால் 1–4–2019 அன்று கீழ்கண்ட 5 கடைகளை பூட்டி சீல் வைக்கப்பட்டுள்ளது. பூட்டப்பட்ட கடைகளை பொதுஏலம் மூலம் ஒப்படைக்க மன்றத்தின் அனுமதிக்கு.

1) கடை எண்.B11 மார்த்தாண்டம் பேருந்து நிலைய புதிய கடை குத்தகைதாரர் திரு. லாசர்
2) கடை எண்.B12 மார்த்தாண்டம் பேருந்து நிலைய புதிய கடை குத்தகைதாரர் திருமதி. சுனிதா
3) மார்த்தாண்டம் மாட்டு இறைச்சி கடை E5 குத்தகைதாரர் திரு. டார்வின்
4) மார்த்தாண்டம் மாட்டு இறைச்சி கடை E7 குத்தகைதாரர் திரு. ஜெயசிங
5) கடை எண்.8 மார்த்தாண்டம் பேருந்து நிலைய பழைய கடை குத்தகைதாரர் திரு. தேவராஜ்

**நகர்மன்றத் தீர்மான எண். 3293**

**மறுஏலம் கோர அனுமதிக்கப்படுகிறது**

ஆணையாளர் மற்றும்
தனி அலுவலர்,
குழித்துறை நகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையாளர்,
குழித்துறை நகராட்சி.

ஆணையாளர் மற்றும்
தனி அலுவலர்,
குழித்துறை நகராட்சி.